# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.739/2018</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **எ.ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்றுநகல் எ.ம.சா.ஆ.1, எதிர்மனுதாருக்கும் 1ம் எதிர்மனுதாருக்கும் அவருடைய ஓட்டுநருக்கும் அனுப்பிய அறிவிப்பு நகல் எ.ம.சா.ஆ.2, 1ம் எதிர்மனுதாரர் அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை எ.ம.சா.ஆ.3, ஓட்டுநர் பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த கடித உறை எ.ம.சா.ஆ.4,

<u>**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கரவாகனம் எங்கள் நிறுவனத்தில் முழுமையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோனவர் மோட்டார்சைக்கிளில் Billion Rider ஆக பயணம் செய்துள்ளார் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவரை பொறுத்தமட்டில் காப்பீடு முழுமையாக உள்ளது என்றால் சரியல்ல. இது Hit and Run வழக்காகும். எங்கள் நிறுவனத்தை பொறுத்தமட்டில் விபத்தில் இறந்துபோனவர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். தனியார் புலன்விசாரணை அதிகாரி மூலம் விபத்து பற்றி விசாரித்து அதன்அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அந்த விசாரணை அறிக்கையை

வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்று அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மேற்படி அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர்உரிமம் இல்லையென்று மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த காலத்திலேயே புலன்விசாரணை செய்திருந்தால் 1ம் எதிர்மனுதாருக்கு ஓட்டுநர்உரிமம் இருந்தது என்ற விவரம் தெரிந்திருக்கும் என்றும், தற்போது சுமார் 7 ஆண்டுகள் கழித்து புலன்விசாரணை செய்து வழக்கிற்காக அறிக்கை தயாரித்தாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் காரணம் என்பதால் 3ம் தரப்பினரான இறந்தவர் குடும்பத்தினற்கு எங்கள் நிறுவனம் நஷ்டஈடுகொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.